**சுருக்கம்**

பள்ளிக்கல்வி-2005-2006ம் ஆண்டு பகுதி II திட்டம்- இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி/புத்தறிவுப் பயிற்சித் திட்டம்- ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (இ1)துறை**

அரசு ஆணை (நிலை) எண்.85,
நாள் 16.5.2005

படிக்கப்பட்ட:

பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் எண்.94479 / பிடி.6 / 2004 நாள் 6.1.2005.

*****

ஆணை:

பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையின் கீழ் மாநில அளவிலான திறமைமிக்க குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின்படி மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டம் 2003-2004ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி அப்புதிய பாடத் திட்டத்திற்கான புத்தகங்கள் 2003-2004ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| கல்வியாண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|
| 2003-2004 | VI மற்றும் IX | அனைத்து பாடங்களும் |
| | X | தமிழ்ப்பாடம் மட்டும் |
| 2004-2005 | VII, XI | அனைத்துப் பாடங்களும் |
| | X | தமிழ் தவிர அனைத்துப் பாடங்களும் |
| 2005-2006 | VIII | அனைத்து பாடங்களும் |
| | XII | அனைத்து பாடங்களும் |

புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, வகுப்பறைகளில் மாணவர்களுக்கு சிறப்பாகக் கல்வி கற்பிப்பதற்கான

அதிகம் அளிக்கப்படல் வேண்டும். இம்மாதிரி பணியிடைப் பயிற்சியின் விளைவாக செயல்படக் கூடிய செயல்கள் பின்வருமாறு:

அ. VIII, XII புதிய புத்தகங்களை ஆசிரியர்கள் புதிய முறையில் கற்பித்தல் வேண்டும்.

ஆ. தலைமை ஆசிரியர்களுக்கு உற்று நோக்குவதற்கான பயிற்சியும், மேற்பார்வையிடல்,

பள்ளியை நிர்வகிப்பதற்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இ. ஆய்வு-அலுவலர்களுக்கு தகவல் தொடர்பு திட்டத்தைப் பகிர்ந்தளித்தல், முடிவெடுக்கும்

திறமை முதலியவை சம்பந்தமாக பணியிடைப் பயிற்சிகள் அளிக்கப்படல் வேண்டும்.

இந்தத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ.50.00 இலட்சம் ஆகும். எனவே, ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு 2005-2006ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி 1இல் உள்ள பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துதுருவை ஏற்று, 2005-2006ம் ஆண்டில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப்பயிற்சி/ புத்தறிவு பயிற்சி அளித்திடும் திட்டத்திற்காக ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்)தொடரும் செலவினமாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் உள்ள செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம்:

2202-பொதுக்கல்வி-02, இடைநிலைக்கல்வி-004 ஆராய்ச்சியும், பயிற்சியும், பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II மாநிலத்திட்டம் JI ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் 72 பயிற்சி (த.தொ.கு.எண்.2202-02-044-JI-7206)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.22104/கல்வி-II/2005 நாள் 26.4.2005-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை 9.
மாநிலக் கணக்காயர், சென்னை 18.
மாநிலக் கணக்காயர், சென்னை 18 (பெயரில்)
சம்பந்தப்பட்ட கருவூலம்/சம்பள கணக்கு அலுவலர்
பள்ளிக்கல்விஇயக்குநர் வழியாக.

நகல்:

நிதி (கல்வி II (ம)BG II) துறை, சென்னை 9.
மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.